12th February 1958]

செய்யப்பட்டு மோசமாக ஆகிவிடக்கூடாது என்ற காரணத்தினல் இவ் வேலைகள் உடனடியாகச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தொடர்ந்து அடுத்த வருஷ முடிவிற்குள் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : இட வளர்ச்சித் திட்டத்தின் கீழ் போடப்படுகிற திட்டங்கள் எல்லாம் அந்த அந்த வட்டாரம், தொகுதி எம்.எல்.ஏ.க்களைக் கலந்து கொண்டு போடப்படுகிறதா ? பணத்தையும் தொகுதி வாரியாகப் பிரித்து அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த அந்தப் பகுதி மக்கள் ஒத்துழைக்க எவ்வளவு தூரம் தயாராய் இருந்தார்களோ அவ் வளவு தூரம் பணமும் ஒதுக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது எல்லா இடங்களிலுமே உற்சாகம் ஏற்பட்டு எல்லோருமே பங்கு எடுத்துக்கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள். ஆகவே இப்போது ப்ளானிங் பாடியை கலந்து கொண்டு தாலூகா வாரியாகவே பணம் ஒதுக்கப்படுகிறது.

Cinema Theatres.

* 59 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Home be pleased to state ; the number of (i) permanent and (ii) touring cinema theatres in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are 334 permanent cinemas and 353 touring cinemas in this State.

SRI P. G. MANICKAM : தலைவர் அவர்களே, சினிமாத் தியேட்டர்களில் பெண்களுக்கு திரையை ஒட்டி இடம் ஒதுக்கப்பட்டிருக்கிற காரணத்தினல் மின்விசையினல் பெண்களுடைய கண்கள் கெட்டுப்போகின்றன. ஆகவே பெண்களுக்குப் பாதுகாப்பான இடத்தில் பின்னல் வசதியாக இடம் ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது அமுலில் இருக்கிற விதிப்படி பெண்களுக்கு தனியாக ஸ்தானம் ஒதுக்குவது இல்லை. ஏதோ வேண்டுமென்றல் பின்னல் இடம் இருக்கட்டும் என சினிமா தியேட்டர் சொந்தக்காரர்கள் வைத்திருக்கிறார்களே தவிர பெண்கள் எங்கு சௌகரியமோ அங்கு உட்கார்ந்துகொள்ளலாம்.

Saraswathi Mahal Library, Tanjore.

* 60 Q.—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have taken any steps to publish the old valuable manuscripts in the Saraswathi Mahal Library at Tanjore; and

(b) if so, what they are?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) Since 1948–49, the Government have been sanctioning grants for the publication of important manuscripts of the library. An Expert Committee appointed by the Government selects the manuscripts for publication. A sum of rupees one lakh was paid to the library during the period from 1948–49 to 1951–52 towards the publication of manuscripts. Since then, the Government have